**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 16-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 55/2022**
(குற்ற எண்.268/2020, தேவகோட்டை நகர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தேவகோட்டை நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.268/2020.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.லஷ்மி (1 வது எதிரி) (40/2020)
த/பெ. கருப்பையா

2.மீனாள் (2 வது எதிரி) (38/2020)
க/பெ. பாதம்பிரியான்

3. பிரியா (3 வது எதிரி) (21/2020)
த/பெ. பாதம்பிரியான்

4. ஜோதிகா (4 வது எதிரி) (19/2020)
த/பெ. பாதம்பிரியான்

5.பாதம்பிரியான் (5 வது எதிரி) (40/2020)
த/பெ. மலையாண்டி

6. கருப்பன் (எ) கருப்பையா (6 வது எதிரி) (44/2020)

த/பெ. மலையாண்டி

.....எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்

சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>தேவகோட்டை நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண்.268/2020. |
| 2. | எதிரிகள் | 1.லஷ்மி (1 வது எதிரி)<br>த/பெ. கருப்பையா<br><br>2.மீனாள் (2 வது எதிரி)<br>க/பெ. பாதம்பிரியான்<br><br>3. பிரியா (3 வது எதிரி)<br>த/பெ. பாதம்பிரியான்<br><br>4. ஜோதிகா (4 வது எதிரி)<br>த/பெ. பாதம்பிரியான்<br><br>5.பாதம்பிரியான் (5 வது எதிரி)<br>த/பெ. மலையாண்டி<br><br>6. கருப்பன் (எ) கருப்பையா (6 வது எதிரி)<br>த/பெ. மலையாண்டி<br>**<u>1 முதல் 6 வரையிலான எதிரிகளின் முகவரி:</u>**<br>கைலாசநாதபுரம், தேவகோட்டை. |

<table>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="3">1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2)-ன் கீழும் 5,6 வது எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2), 324 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">14/08/2020</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">15/08/2020</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">இல்லை</td><td rowspan="2">முன்பிணை பெற்ற நாள்: 20/08/2020</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">17/02/2022</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">05/02/2024</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="3">10.</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>19/09/2024</td><td>19/09/2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>19/09/2024</td><td>19/09/2024</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.3 | 19/09/2024 | 19/09/2024 |
| | | அ.சா.4 | 02/06/2025 | 02/06/2025 |
| | | அ.சா.5 | 02/06/2025 | 02/06/2025 |
| | | அ.சா.6 | 02/07/2025 | 02/07/2025 |
| | | அ.சா.7 | 25/11/2025 | 25/11/2025 |
| | | அ.சா.8 | 12/03/2026 | 12/03/2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 23/03/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 05/02/2024 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 23/03/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 29/04/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2)-ன் கீழும் 5,6 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2), 324 மற்றும்** | | |

| | | |
|---|---|---|
| | | **பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கண்ணதாசன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

இந்நிலையில் கடந்த 14.08.2020 தேதி இரவு சுமார் 8 மணி அளவில் வாதியின் வீட்டிற்கு வந்த 1. கருப்பன் 2. பாகம்பிரியான் 3. மீனாள் 4. லெட்சுமி 5. சங்கர் 6. பிரியா 7. ஜோதி 8. மருதுபாண்டி ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து வாதியை தாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து எதிரிகள் அனைவரும் வாதியைப் பார்த்து ஏண்டி தேவுடியா முண்டை கண்டார ஒழி

சும்மா இருக்கமாட்டியாடி உன்கிட்ட ஆராயி தேவுடியா வேலை பார்த்தா அவளை நாங்க அடிக்கக்கூடாது சட்டமாடி இருக்கு ஏண்டி புண்டை மகளே என்று பிற அருவறுக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதைப் பார்த்த வாதியானவர் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டே எதிரிகளிடம் ஆராயி பெட்டிசன் கொடுத்ததற்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று கூறியுள்ளதாகவும், மேலும் வீட்டிற்குள் நுழைந்த எதிரிகள் லெட்சுமி, மீனாள், பிரியா, ஜோதி ஆகியோர்கள் வாதியின் கைகளை பிடித்துக்கொண்டு தேவுடியா முண்டை உன்னை கொன்றால் தாண்டி சரியா வருவே என்று பேசியதாகவும் மேலும் எதிரி பாகம்பரியான் கையில் கொண்டு வந்த கிரிக்கெட் மட்டையாலும் எதிரி கருப்பன் @ கருப்பையா பீர் பாட்டிலாலும் இளம் பிழையாளி மருதுபாண்டி கையில் வைத்திருந்த கம்பாலும் வாதியை பலமாக உடம்பிலும் தலையிலும் அடித்து உடம்பில் வீக்கக்காயத்தையும் மண்டை உடைந்து சாதாரணக் காயத்தை ஏற்படுத்தியும் இளம்பிழையாளி சங்கர்(எ) சங்கர்பாண்டி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் செய்ததாகவும், கீழே விழுந்த வாதியின் சேலையை மேற்படி எதிரிகள் பிடித்து இழுத்து உருவி எரிந்து அவமானத்தை ஏற்படுத்தியதாகவும் வாதியானவர் வலி தாங்காமல் சத்தம் போடவும் ஆட்கள் வருவதைப் பார்த்து எதிரிகளுடன் சேர்ந்து இளம் பிழையாளிகள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி வாதியைப் பார்த்து இன்னைக்கு இல்லடி என்னைக்கு இருந்தாலும் உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி வாதிக்கு உயிர் பயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகள் மீது

இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2)-ன் கீழும் 5,6 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 323, 506(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2)-ன் கீழும் 5,6 வது எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2), 324 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 திருமலை தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2020 ம் தேதி இரவு 08.00 மணியளவில் கைலாசநாதபுரத்தில் உள்ள ராகினி வீட்டுக்கு எதிர்புறத்தில் உள்ள கருப்பையா, ராமைய்யா, பாகம்பிரியாள், லெட்சுமி, மீனாள், பிரியா, சோபிகா, சங்கர்,மருதுபாண்டி ஆகியோர்கள் வீட்டில் தனது அம்மா ராகினி இருக்கும்போது வீட்டில் வேலை பார்த்த ஆராயிக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது என்றும் அதற்கு நாங்கள் தான் தூாண்டிவிட்டு புகார் கொடுக்கசொன்னோம் என நினைத்து கருப்பையா, பாகம்பிரியாள், லெட்சுமி, மீனாள், சோபிகா, அத்துமீறி வீட்டில் நுழைந்து கையை பிடித்து இழுத்து தேவிடியா முண்ட என அசிங்கமாக பேசி கிரிக்கெட் மட்டையால் பாகம்பிரியாள் என்பவர் தனது அம்மாவை அடித்து கருப்பையா என்பவர் பீர்பாட்டிலால் அடித்தும், மருதுபாண்டி கம்பால் அடித்தும் காயப்படுத்தியுள்ளனர் என்றும் பின்னர் சேலையை பிடித்து இழுத்து எனது அம்மாவை இன்றைக்கு மானபங்க படுத்தி எதிர்த்தார்போல் பாகம்பிரியான். எறிந்துவிட்டார் என்றும் பின்னர் 108 ஆம்புலன்ஸை வரசொல்லி அனுப்பி வைத்துவிட்டோம் என்றும் தப்பித்துவிட்டாய் என்றைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என சொன்னார்கள் என்றும் பின்னர் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு எனது அம்மா ராகினியை சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 நந்தினி தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2020 ம் தேதி இரவு 08.00 மணியளவில் தன் வீட்டிற்கு எதிர்தார்போல் எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள்

என்றும் புகார்தாரர் வீட்டில் வேலைபார்த்த ஆராயி என்பவருக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்துள்ளது என்றும் லெட்சுமி, மீனாள், ஜோபிகா, ஆகியோர்கள் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து உன் வீட்டில் வேலைபார்த்தால் அடிக்க கூடாதா என சொல்ல தேவிடியா முண்ட என அசிங்கமாக பேசி புகார்தாரரின் முடியை கையை பிடித்து இழுத்து ரோட்டு வாசலில் வைத்து மீனாள் மற்றும் லெட்சுமி புகார்தாரரின் கையை பிடித்து இருந்தபோது பாகம்பிரியான் என்பவர் கிரிக்கெட் மட்டையால் புகார்தாரரை அடித்துள்ளார் என்றும் கருப்பன் என்பவர் பீர்பாட்டிலால் புகார்தாரரை முற்பட்ட போது எனது வீட்டுக்காரரான அ.சா.1 ஊடே நுழைந்து தடுத்தபோது பீர் பாட்டில் அவர் தோள்பட்டையில் பட்டு உடைந்துவிட்டது என்றும் பின்னர் புகார்தாரர் கீழே விழுந்து மயங்கிவிட்ட. மருதுபாண்டி சடே சடேர் என புகார்தாரரை அடித்துவிட்டார் என்றும் பாகம்பிரியான் என்பவர் புகார்தாரரின் சேலையை பிடித்து இழுத்து உருவி எதிர்தார்போல் கருவிலில் வீசிவிட்டார் என்றும் பின்னர் என் கையில் தான் சாவு என்று எதிரி பாகம்பிரியான் பின்னர் 108 வர சொல்லி அரசு மருத்துவமனைக்கு சொன்னார் என்றும் அழைத்துசென்றோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 ராஜ்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2020 ம் தேதி சாட்சி மீண்டும் மாற்றி தானாக முன்வந்து 15.08.2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் தாலுகா காவல்நிலைய போலீசார் வந்து வரைபடம் வரைந்தார்கள் என்றும் பார்வை மகஜரில்

1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் (பார்வை மகஜர் அ.த.சா.ஆ,1). போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.6 மனோசிந்தியா தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2020-ல் இரவு 10.30 மணியளவில் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது ராகிணி என்பவர் தன்னை 14.08.2020-ம் தேதி இரவு 10.00 மணிக்கு அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள் அவருடைய வீட்டில் வைத்து பாட்டில் மற்றும் பேட்டால் தாக்கியதாக கூறினார் என்றும் அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவரை பரிசோதனை செய்ததில் நெற்றியில் 2x1 அளவுள்ள வெட்டுக்காயம் இருந்தது என்றும் அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று விபத்துபதிவேட்டுடன் சேர்ந்து காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றும் காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.7 பேபிஉமா தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடத்தை அ.சா.ஆ.4 ஆகவும், தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.8 முத்துராமலிங்கம் தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் தேவகோட்டை நகர் காவல் நியைத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் தனக்கு முன்பாக தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த பேபி உமா ஆய்வாளர் அவர்களையும் அவருடைய எழுத்துக்களையும் நன்கு தெரியும் அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 15.08.2020 ம் தேதி காவல் நிலையத்தில் பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் குற்ற எண் 268/2020 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் (மேற்படி புகார் மனு அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரும் பாதிக்கப்பட்டவருமான பட்டியல் சாட்சி 1 ராகினி கடந்த 20/04/2023 தேதியில் இறந்து விட்டதாக அரசு தரப்பில் அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டு புகார்தாரர் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படாத நிலையில் அரசு தரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1, 2, 4 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.5 புகாரில் 1 முதல் 6 எதிரிகளும் மருதுபாண்டி மற்றும் சங்கர் என்பவர்களும் சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 14/08/2020 ஆம் தேதி இரவு 8 மணி அளவில் 6 வது எதிரி கருப்பையா, பாகம்பிரியாள், 1 வது எதிரி லட்சுமி, 2 வது எதிரி மீனாள் மற்றும் சோபிகா ஆகியோர் அத்துமீறி வீட்டில் நுழைந்து கையைப் பிடித்து இழுத்து தேவிடியா முண்டை என்று அசிங்கமாக பேசி கிரிக்கெட் மட்டையால் பாகம்பிரியாள் என்பவர் தன் அம்மாவை அடித்ததாகவும் கருப்பையா என்பவர் பீர் பாட்டிலால் அடித்தும் மருதுபாண்டி கம்பால் அடித்து காயப்படுத்தியதாகவும் பின்னர் சேலையை பிடித்து இழுத்து தனது அம்மாவை மானபங்கப்படுத்தி எதிர்த்தார்போல் பாகம்பிரியான் எறிந்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மற்றொரு கண்ணுற்ற விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 டோ அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 14/08/2020 ஆம் தேதி இரவு 8.00 மணி அளவில் லட்சுமி, மீனாள், ஜோபிகா ஆகியோர்கள் அத்துமீறி வீட்டிற்கு நுழைந்து தேவிடியா முண்டை என்று அசிங்கமாக பேசி புகார்தாரரின் முடியை கையை பிடித்து இழுத்து ரோட்டு வாசலில் வைத்து மீனாள் மற்றும் லட்சுமி புகார்தாரரின் கையைப் பிடித்து இருந்தபோது பாகம்பிரியான் என்பவர் கிரிக்கெட் மட்டையால் புகார்தாரை அடித்துள்ளார் என்றும் கருப்பன் என்பவர் பீர் பாட்டிலால் புகார்தாரரை முற்பட்டபோது அ.சா.1 ஊடே நுழைந்து தடுத்தபோது பீர்பாட்டில் அவரின் தோள்பட்டையில் பட்டு

உடைந்து விட்டதாகவும், மருதுபாண்டி புகார்தாரரை அடித்ததாகவும், பாகம்பிரியான் புகார்தாரரின் சேலையைப் பிடித்து இழுத்து உருவி வீசி விட்டதாகவும் பின்னர் என் கையில் தான் சாவு என்று பாகம்பரியான் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பு வழக்குப்படி சோபிகா என்பவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக எந்த குற்றச்சாட்டும் இல்லாத நிலையில் அ.சா.1, 2 ஆகியோரின் சாட்சியத்தில் சோபிகா என்பவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அ.சா.1, 2 ஆகியோரின் சாட்சியம் ஒருவர் மற்றவரின் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக அமையாமல் அ.சா.1 எதிரி கருப்பையா தன் அம்மாவை பீர் பாட்டிலால் அடித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அ.சா.2 டோ எதிரி கருப்பன் பீர் பாட்டிலால் அடிக்க முற்படும் போது அ.சா.1 ன் தோள்பட்டையில் பட்டு உடைந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் சம்பந்தப்பட்ட அ.சா.1 அவ்வாறு எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

(8.2) இவ்வழக்கில் காயம்பட்டவரின் மகனான அ.சா.1 ம், அ.சா.1 ன் மனைவியான அ.சா.2 ம் இவ்வாறு சாட்சியம் அளித்து இருக்கையில், அ.சா.ஆ.5 புகாரில் சம்பவம் பற்றிய விவரங்கள் அனைத்தும் தெரிந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் சாட்சியான அ.சா.4 கார்த்திகேயனோ அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சம்பவம் ஞாபகம் இல்லை என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.5 புகாரின் படியும் அரசு தரப்பு வழக்கின்படியும் சம்பவம் 14/08/2020 ஆம் தேதி இரவு 8.00 மணி அளவில் நடந்ததாக

சொல்லப்படும் நிலையில் அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் புகார்தாரர் இரவு 10.30 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கையில் இரவு 10.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார். காயம்பட்டவர் மருத்துவமனையில் சேர்வதற்கு 1/2 மணி நேரத்திற்கு முன்பாக சம்பவம் நடைபெற்றதாக மருத்துவரிடம் அ.சா.ஆ.2 ல் சொல்லியுள்ளதற்கு வேறுபட்டு புகாரில் இரவு 8:00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தருணத்தில் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் 1/2 கிலோ மீட்டர் தான் தூரம் இருக்கும் என்று சாட்சியமளித்துள்ளதும் கவனிக்கத்தக்கதாகும். ஆனால் அ.சா.1 றோ தான் காயம்பட்ட நபரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றும் 108 ஆம்புலன்ஸ் வரும்வரை காத்திருந்ததாகவும் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பத்தி 1-ல் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவமானது 14/08/2020 இரவு 8.00 மணி அளவில் நடைபெற்றதாக புகாரில் கண்டுள்ள நிலையில் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 2-ல் அரசு மருத்துவ மனையில் இருந்து இரண்டு கட்டிடங்கள் தள்ளி தான் நகர் காவல் நிலையம் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் சம்பவத்திற்கு மறுநாள் மதியம் 14.50 மணிக்கு தான் அ.சா.ஆ. 5 புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

(8.3) இவ்வழக்கில் மற்றொரு சாட்சியான அ.சா.5 ம் சம்பவம் பற்றி தெரியாது என்று பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். ஏனைய சாட்சிகளில் அ.சா.3 பார்வை

மகஜர் சாட்சியாவார், அ.சா.6 மருத்துவராவார், அ.சா.7 மற்றும் 8 ஆகியோர் விசாரணை அதிகாரிகள் ஆவர். புகார்தாரரின் மகனும் மருமகளுமான கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, 2 ஆகியோரின் சாட்சியம், மேற்கண்டவாறு ஒன்றுக்கொன்று உறுதிப்படுத்தும் விதமாக அமையாமல் உள்ள நிலையில் கண்ணுற்ற தனிநபர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4ம் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதையும், மேலே விவாதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், காரணங்களையும் கருத்தில் கொள்கையில் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள சம்பவமும் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதி உடையவர்கள் ஆகிறார்கள்.

**9) முடிவாக, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2)-ன் கீழும் 5,6 வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 448, 294(b), 506(2), 324 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.04.29 18:21:53 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | திருமலை | அ.சா.1 | கண்ணுற்ற சாட்சி |
| 2. | நந்தினி | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | ராஜ்குமார் | அ.சா.3 | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | கார்த்திகேயன் | அ.சா.4 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 5. | முத்துமாரி | அ.சா.5 | கேள்விப்பட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 6. | மனோசிந்தியா | அ.சா.6 | அரசு மருத்துவர் |
| 7. | பேபிஉமா | அ.சா.7 | விசாரணை அதிகாரி |
| 8. | முத்துராமலிங்கம் | அ.சா.8 | தற்போதைய விசாரணை அதிகாரி |

## <u>Judicial Form No. 68</u>

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | பார்வை மகஜர் | 19/09/2024 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு | 02/07/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 25/11/2025 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | மாதிரி வரைபடம் | 25/11/2025 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | புகார் மனு | 12/03/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.04.29 18:22:03 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.